# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 03 ஞாயிற்றுக்கிழமை (17.03.2002) தொலைபேசி 3378 ஒலி 88









யாழ் பல்கலையின் 21வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. துணை வேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கைலாசபதி அரங்கிற்கு குடை, ஆலவட்டம் சகிதம் அழைத்துச் செல்லப்படுவதை முதற்படத்திலும், துணை வேந்தர், பதிவாளர், பீடாதிபதிகள், துறைத் தலைவர்களை 2வது படத்திலும் சபையில் அமர்ந்திருப்போரை 3வது படத்திலும் காணலாம்

## பிரதமர் ரணில் அவசர பணிப்பு

# யாழ் - கண்டி வீதியை திறக்க

# 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

### எழுதுமட்டுவாளில் படைத்தளம் அமையும்

(வலம்புரி சிறப்பு செய்தியாளர்)

**யாழ்ப்பாணம் - கிளிநொச்சி வரையிலான ஏ-9 கண்டி வீதியைத் திறப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அரசாங்க நிதியில் இருந்து சுமார் 25 மில்லியன் ரூபாவை பாதுகாப்பு அமைச்சுக்கு உடன் வழங்குமாறு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

யாழ் குடாநாட்டு மக்கள் நாட்டின் சகல பகுதிகளுக்கும் இலகுவாகப் பிரயாணம் செய்வதற்குரிய தரை வழிப்பாதையான ஏ-9 கண்டி வீதி சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டு இருந்தது

ஓயாத அலைகள் மூலம் இராணுவத்தினரின் பாரிய இராணுவத்தளமான ஆனையிறவு முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டபின் அந்த இராணுவத்தளத்திற்குப் பதிலாக எழுதுமட்டுவாளில் பாரிய இராணுவத்தளம் அமைக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

ஏ-9 கண்டி வீதி பயணிகள் போக்குவரத்திற்கு திறந்து விடப்படுவதற்கு முன் எழுதுமட்டுவாள்

(10ம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கில்

## தேர்தல் ஒத்திவைக்கும் அறிவிப்பு அடுத்தவாரம்?

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்கும் அறிவிப்பு அடுத்த வாரமளவில் வெளிவரலாம் என்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை யாழ்குடாநாட்டில் உள்ளூராட்சிமன்றங்களின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டைகள் தற்போது தபால்த் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் தேர்தல் பிரசார வேலைகளும் துளிர் விட

(10ம் பக்கம் பார்க்க)

### மண்டைதீவிற்கு மக்கள் செல்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

கடந்த பல வருடங்களாக மண்டைதீவில் தங்கியுள்ள கடற்படையினர் மண்டைதீவுக்குச் செல்வதற்கு விதித்திருந்த தடையை நீக்கியதை அடுத்து மண்டைதீவு மக்கள் நேற்று முன்தினம் முதல் அங்கு சென்று வருகின்றனர்

கடற்படையினர் மண்டைதீவிற்குச் செல்வதற்கு விதித்திருந்த தடையை நீக்கியமை குறித்து வலம்புரி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

### தனி ஈழக் கோரிக்கையை கைவிட்டால்

# புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்கிவிடும்

### அமெ. அமைச்சர் கிறிஸ்ரீனா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதில் உண்மையான ஈடுபாட்டுடன் மிக அக்கறையாக இருக்கின்றனர்.

இவ்வாறு அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசிய அமைச்சர் றொக்கா அம்மையார் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலுந் தெரிவிக்கையில்:-

இலங்கையில் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல, எனினும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உண்மையான ஈடுபாட்டுடன் தீவிரமாக சமாதானத்தை அடைவதற்காகப் பாடுபடுகின்றனர்

(10ம் பக்கம் பார்க்க)

### புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.வி.பி போராட்டம்

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பியினர் நாளை கொழும்புக் கோட்டையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இச்சத்தியாக்கிரகத்தின் போது விடுதலைப் புலிகளுக்கு நாட்டைத் தாரைவார்க்கும் ரணில்-பிரபாகரன் ஒப்பந்தத்தை மக்களுக்கு விளக்கி விழிப்பூட்டும் தினமாகப் பிரகடனப்படுத்தி சிங்களம், தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களை நாடு தழுவிய ரீதியில் விநியோகிக்க உள்ளதாக ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளனர். (வ)

## சர்வதேச கண்காணிப்புக்குழு நேற்று யாழ்ப்பாணம் வந்தது

### அரச அதிபருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இருசாராரும் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை கண்காணிப்பதற்கான சர்வதேச கண்காணிப்புக்குழு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து அரச அதிபர் க. சண்முகநாதனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

### சமாதானத்தை வலியுறுத்தி

## நுவரெலியாவில் இன்று மாபெரும் எழுச்சி விழா

(நுவரெலியா)

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஆதரவு தெரிவித்தும், நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தியும் இன்று நுவரெலியாவில் மாபெரும் எழுச்சி விழா நடைபெறவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இவ்வெழுச்சி விழாவில் கலந்து கொள்வதற்காக சகல கட்சித் தலைவர்களுக்கும்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வாணி சோதிடம்

பார்க்கும் இடமெல்லாம் சோதிட சாஸ்த்திரம்கேட்டுப் பார்த்தால் உண்மை புரியும் தொழில், கல்வி, பயணம் காதல் நோய் எது வாயினும் எம்மிடம் திருமாங்கல்யத் திற்கு. சகல இன, மதத்தி லும் உள்நாட்டு,வெளிநாட்டு குறிப்புகள் உண்டு தொடர்பு கொள்ளவும் பணியாற்றும் இடங்கள்ரோசதிடர் சி. கணே சன் 22/1 கச்சேரி வீதி, நல் லூர், காலை 9 முதல் 3.30 வரைபெருமாள் ஆலய முன், யாழ்பாடி வீதி, (4842)

### தியானம்

நான் ஞானியோ,சாமியோ, முற்றும் துறந்த முனியுமல்ல. கண்ணன் தியானத்தால் பல தீராத நோய்களை மாற்ற அருளியுள்ளார், மருந்தோ மந்திரமோ இன்றி யறு அறி வித்தல் வரை தியான வளி யில் நோய் குணப்படுத்துதல் நிறுத்தப்பட்டு ளது. வந்து ஏமாற வேண்டாம் நோயா ளர். வாணி 22 1 கச்சேரி வீதி, நல்லூர். (4822)

## கருத்துரை

(மந்திகை)

தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் வடமராட்சிப் பிரி வின் ஏற்பாட்டில் 'இன்றைய அரசியல் நிலை' என்னும் தலைப்பில் இன்று மு.ப 10 மணிக்கு நெல்லியடியில் அமைந்துள்ள அலுவலகத்தில் கருத்துரை இடம் பெறவுள் ளது. )உ-23)

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடாத்தும் அமரர் அ. தம்பிராசா ஞாபகார்த்த சுற்றுச் கேடயத்திற்கான உதைபந்தாட்ட போட்டி இன்று அண்ணா வி.க, எதிர் விக்ரோறியன்ஸ் வி.க, நாம கள் வி.க எதிர்ஜொலிஸ்டார் வி.க ஆகியன மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் மோதவுள் ளன. (உ-3)

## கூட்டம்

(மந்திகை)

நாகர் கோவில் நாகதம்பி ரான் ஆலய நிர்வாகக் கூட் டம் நாளை மறுதினம் பி. ப 3 மணிக்கு புலோலி உபய கதிர்காமம் கோவில் முன்ற லில் நடைபெறவுள்ளது. (எ-23)

**பத்தாமிடத்தில்**

துக் காட்டிக் கொடுத்து வஞ் சனை செய்து விடுவார்கள். பாலுக்கும் காவல் பூனைக் கும் தோழன் என்றபண் பாட் டிற்கு இலக்கணமாக விளங்கு வார்கள் இது மித்திர பேத மாகும்.

# நூறு நாள் வேலைத்திட்டம்

# பதிவாளர் நாயகத்தின் சேவை

# யாழ். செயலகத்தில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நூறு நாள் வேலைத்திட் டத்தின்கீழ் பதிவாளர் நாய கம் நடத்தும்' அதே இடத்தில் சேவை 'இம்மாதக் கடைசி வாரத்தில் நடைபெறவுள்ளது

இதில் பதிவாளர் நாயகம் எல்.கே.ரத்னசிறி மற்றும் பதிவாளர் நாயகத்திணைக் கள உயர் அதிகாரிகளும் கல ந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி சேவையில் பின் வரும் விடயங்களில் மக்கள் தொடர்புகொள்ள முடியும்

● யாழ். மாவட்டத்திலும், யாழ். மாவட்டத்துக்கு வெளி யேயும் நிகழ்ந்த பதியப்ப டாத பிறப்பு. இறப்புக்களை பதிவுசெய்வதற்கான விண் ணப்பங்களை சமர்ப்பிக்க லாம்.

● காணாமற் போனோரை இறந்தவராகக் கருதி பதிவு செய்யும் 1995ம் ஆண்டின் 58ம் இலக்க சட்டத்தின் கீழான விண்ணப்பத்தை சம ர்ப்பிக்கலாம்.

● இந்தியாவில் அகதிமுகா மில் பிறந்த பிள்ளையின் பதிவு தொடர்பிலும் விண் ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

● யாழ். மாவட்டத்திற்கு வெளியே நிகழ்ந்த விவாக பிறப்பு, இறப்பு, பதிவுகளின் பிரதிகளை பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக் கலாம்.

● யாழ். மாவட்டத்தில் பெறமுடியாத கொழும்பு மத் திய பதிவேட்டறையில் பெறக்கூடிய தானவிவாக பிறப்பு, இறப்பு சான்றிதழ் தொடர்பில் விண்ணப்பங்க ளை சமர்ப்பிக்கலாம்.

● பிறப்பு, இறப்பு சான்றி தழ்களில் பிழை திருத்தல் தொடர்பான விண்ணப்பங்க ளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

● யாழ். மாவட்ட பிறப்பு இறப்பு, பதிவாளர்களும் மேற்படி சேவையில் பங்கு பற்றி, அனுமதிக்கப்படும் பிறப்பு, இறப்பு பதிவுகளை உடனுக்குடன் பதிவுசெய்து சான்றிதழ்களை வழங்குவத ற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி சேவை மூலம் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்வதுடன் தங்கள் தேவையைப் பூர்த்திசெய்வத ற்கு ஆதாரமாக தேவைப்ப டும் ஆவணங்களை நேரகா லத்துடன் தேடிவைத்துக் கொள்ளுமாறும் வரும்போது மூல ஆவணங்களுடன் அவற் றின் போட்டோ பிரதிகளை யும் கொண்டுவருமாறு கேட் டுக்கொள்ளப் படுகிறார்கள்.

● பிறப்பொன்று தொடர் பில் பிறப்பு நிகழ்ந்த இடம் திகதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

வைத்தியசாலைக் கடிதம் தடுபூசி அட்டை, சாதகம், ஞானஸ்தானசான்று, பாட சாலைசெல்லும் பிள்ளையா னால் பாடசாலையில் இரு ந்து பெறப்பட்டகடிதம்பெற் றாரின் விவாக சான்றிதழ் (இருப்பின்) பெற்றாரின் பிறப்புச் சான்றிதழ் (இருப் பின்) கூடப்பிறந்த சகோத ரரின் பிறப்புச் சான்றிதழ், நிவாரண அட்டை, பெற் றோரின் அடையாள அட்டை கள் குடும்பபதிவு படிவம்.

● பெற்றோர் பிள்ளையு டன் சமூகமளிப்பது முக்கிய மாகும்.

● இறப்பொன்று தொடர் பில் இறந்த இடம், திகதி, இறப்புக்கான காரணம் என் பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் இறந்தவ ரின் பிறப்புச்சான்றிதழ் அடை யாளஅட்டை அல்லது அவ ரை அடையாளப் படுத்தும் ஏதாவது ஆவணத்தின் பிர தியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்,

என காணிப் பதிவாளநும் மேலதிக மாவட்டப் பதிவா ளருமாகிய ந. சதாசிவ ஐயர் அறிவித்துள்ளார். (ந)

## கருத்தரங்கு

(மந்திகை)

யாழ்ப்பாண மாவட்ட கூட் டுறவுச் சபையின் ஏற்பாட்டில் இயக்குநர்கள், கிளைக்குழு உறுப்பினர்களுக்கான கடன் வழங்கல் சேமிப்பு தொடர் பான கருத்தரங்கு இன்று காலை 9.00 மணிக்கு கட்டை வேலி நெல்லியடிப.நோ.கூ.ச மண்டபத்தில் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலை மையில் நடைபெறவுள்ளது. (உ-23)

## இராசி பலன்

17/3/2002

பங்குனி 3, ஞாயிறு)
திருதியை பி. ப. 1-41 வரை
அச்சுவினி மு.இ 10-46 வரை
ராகுகாலம்: 4-51 - 6-21
நல்லநேரம்: 9-21 - 10-51

**மேடம்**

தேக சௌக்கியம், தனவிர யம், பெரியோர் ஆதரவு, நல்வ முயற்சி

**இடபம்**

நன்மை விருத்தி, அலைச் சல், பொருள் விரயம், வாக் குப் பலிதம்

**மிதுனம்**

தொழில் நன்மை, எதிர்பா ராத காரியச்சிறப்பு, தெய்வ தரிசனம், கௌரவம்

**கடகம்**

முயற்சி கைகூடும், அதிக பிரயாசை, நிலைமாற்றம், நிர்வாகம்

**சிங்கம்**

காரிய தமதம், பிரியம், பெரியோர் வெறுப்பு, திடீர் நன்மை

**கன்னி**

உறவினர் வெறுப்பு, காரிய தடங்கல், போசன சுகம் தேவையற்ற மனஸ்தாபம்

**துலாம்**

காரியம் கைகூடும், ஜன வசியம், தனவரவு, சௌக் கிய விருத்தி

**விருச்சிகம்**

லட்சுமீகரம், முயற்சி நிறை வேறும், தொழில் முன்னேற் றம், மனமகிழ்ச்சி

**தனுசு**

தனவரவு, குடும்பக்கவலை காரியதாமதம், வியாபார நன்மை

**மகரம்**

சௌக்கியக்குறைவு, காரிய தாமதம், சகோதரர் உதவி திடீர் நன்மை

**கும்பம்**

அன்னியர் சந்திப்பு, காரிய நன்மை, பிரயாண சுகம், செல்வாக்கு

**மீனம்**

வாக்கு கலகம் முயற்சி தாமதம், உஷ்ண வியாதி, மாதர் நட்பு.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது).

வளவன்

## யாழ். பல்கலையில் நேற்று கோலாகலமாக நடைபெற்ற 21வது பட்டமளிப்பு விழா

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின 21வது பொதுப் பட்டமளிப்புவிழா நேற்றைய தினம் காலை 9மணி முதல் பிற்பகல் 4மணி வரையும் ஐந்து அமர்வுகளில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலை மையில் கோலாகலமாக நடைபெற்றது

இப்பட்டமளிப்பு விழாவில் முதுபெரும் தமிழ் அறிஞரான வித்துவான் க.சொக்கலிங்கம் (சொக்கன்) தமிழ்இலக்கியத் திற்கு ஆற்றிய சேவையைக் கௌரவித்து கௌரவ கலா நிதிப்பட்டம் வழங்கப் பட் டது. பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கந்தசாமி சிதம்பரநாதன் சமூகமளிக்காத நிலையில் தத்துவமாணி கலாநிதிப் பட் டம் வழங்கப்பட்டது.

நேற்றைய பட்டமளிப்பின் போது மொத்தமாக 734 பேர் பட்டம் பெற்றிருந்த னர்.

இதில் கலைமாணிப்பட்டத் தினை 259பேரும் தொழில் நிர்வாகமாணிப் பட்டத்தி னை 76பேரும், வர்த்தக மாணிப்பட்டத்தினை 65பே ரும், மருத்துவ சத்திரசிகிச் சைமாணிப் பட்டத்தினை 57 பேரும், முதுகல்வியியல் மாணிப்பட்டத்தினை 46பே ரும் இசைமாணிப் பட்டத்தி னை 33பேரும் நுண் கலை மாணிப் பட்டத்தினை 3 2 பேரும், விஞ்ஞானமாணிபட் டத்தினை 22பேரும், உடற் பயிற்சி டிப்ளோமா பட்டத் தினை27 பேரும் முதுமெய்யி யல் மாணிப்பட்டத்தினை12 பேரும், பட்டப்படிப்பு டிப் ளோமா பட்டத்தினை59பே ரும் பெற்றனா.

இப்பட்டமளிப்பு வைபவத் தின்போது பல்கலைக்கழகத் தில் அனைத்துதுறைகளிலும் சாதனை படைத்தமைக்காக செல்வி நிருபா அரியரத்தி னம், செல்வன் தயாசிங்கம் கோபிசங்கர் ஆகியோருக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப் பட்டன (உ - 77)

## தாச்சி

### சுற்றுப் போட்டி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தின் 50 வது ஆண்டு நிறைவுப் பொன்விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் தாச்சி சுற்றுப் போட்டி யின் இறுதியாட்டம் இன்று பி.ப.4.30 மணிக்கு,

நவாலி சென்றல் விளை யாட்டுக் கழகத்திற்கும், சுன் னாகம் கலைவாணி விளை யாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெறவுள் ளது. (உ)

## சிரமதானப் பணி

யுத்தத்தினால் சேத மடைந்த மட்டுவில் ஸ்கந்தவ ரோதய மகாவித்தியாலயத் தில் இன்று காலை மாபெரும் கிரமதானப்பணி இடம்பெற வுள்ளது.

மட்டுவில் தெற்கு கிராம சேவையாளர் க. வாமதேவ னின் ஏற்பாட்டில் இடம்பெற வுள்ளஇச்சிரமதானப்பணியில் இப்பகுதி பொதுஅமைப்புகள் மற்றும் பாடசாலையின் நலன்விரும்பிகளும் பங்கு கொள்ளவுள்ளனர். (உ-77)

## மாதாந்த

### உதவிப்பணம்

(மந்திகை)

பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர் களுக்கானமார்ச்மாதகொடுப் பனவுகள் அந்தந்த தபாலகங் களில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது. (உ-23)

(வண்ணை சிவன் உற்சவகாலக் கவிதை)

## வரந்தர வர வேண்டும்

(பல்லவி)

வரந்தர வர வேண்டும் வைத்தீஸ்வரா - என்றும்
(வரந்)

2

அரந்தைகள் நீங்கவும் அன்பரைக் காக்கவும்
சிரந் தலை மாலையுந் திருநீறு மணிந்துநீ
(வரந்)

3

வாழும்யாழ்ப் பதியிலே மருவுந் திருக்கோயிலில்
சூழு மடியார் வேண்ட சுந்தர் விடையிவர்ந்து
பாழும் யுந்தந் தணிந்து பாரில் வளஞ் சிறக்க
நாளும் மழை பொழிந்து நன்று மனங்குளிர
(வரந்)

4

பண்ணிசை யொலித்திட திருமுறை பாடியே
பக்தர்கள் நாளுமே அத்தனே யுனைத்தொழ
தண்ணுமை மேளங்கள் தாண்டவம் செய்யவே
தரணியிற் குடை கொடி சகிதமே யடியார் முன்
(வரந்)

முதுபெரும்புலவர்

வை. க. சிற்றம்பலம்

## மட்டுவிலில் மாபெரும் சிரமதானச் செயற்பாடு

யுத்தச்சூழலிலே பாரிய சேதமுற்ற யாழ். சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்திலே திட்டமிட்ட அடிப்படையிலான சிரமதானச் செயற்பாடொன்று மட்டுவில் மத்தியின் கிராம உத்தியோகத்தர் திரு வாளர் க. வாமதேவன் அவர்களால் இன்று 2002 - 03 - 17 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக ஒழுங்குபடுத்தி நடத்தப்படவுள்ளது. ஆர்வ லர்கள் அனைவரும் இதில் பங்குகொள்ள வேண்டு மென்று விநயமாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார் கள்.

தகவல்;
மு. பாலசுப்பிரமணியம்

(4841)

### பத்தாமிடத்தின் கிரகநிலையை அனுசரித்தே

# ஒருவரின் ஜீவனத்திற்கான தொழில் அமைகிறது

## சோதிட பலன்

ஒருவருடைய ஜாதகத்திலுள்ள பத்தாம் வீடு முயற்சி கீர்த்தி, மோட்சம், கன்மம், கடற் பிரயாணம் மானம், சுயமரியாதை, சீவியத் தொழில் என்பவற்றை காட்டும், தொழிலைப்பற்றிக் கூறுவது பத்தாம் வீட்டையும் அவ் வீட்டில் நிற்கும் கிரகத்தையும், அதிபதியையும் தொழில் காரகனையும் ஆராய்ந்தே யாம், இந்தப் பத்தாம் வீடு இலக்கினத்திலிருந்து அல்லது சூரியனிலிருந்து அல்லது சந்திரனிலிருந்து பார்க்க வேண்டும். எது பலம் கூடவோ அதையே எடுக்க வேண்டும், சாதகத்தில் ஆகப்பலமான கிரகத்தையும், பத்தாதிபதி நவாம்சத்திலிருக்கும் பலத்தையும் கவனிக்க வேண்டும். பத்தாமிடத்து அதிபதிக் கிரகமே ஜீவனஸ்தானிபதியாகின்றது.

கஷ்ட நஷ்டம் கடன் தொல்லை

ஜீவனஸ்தானாதிபதி 6,8,12, ல் மறைந்து இருந்து அதன் தெசாபுத்தி அந்தரம் நடை பெறும் சபயத்தில் அந்த ஜாதகர் பணி செய்யும் இடத்தை இலகுவில் கண்டு பிடிக்க முடியாது. அவருக்கு போதிய ஊதியம் கிடைக்காது. எங்கு இருக்கிறார்? என்ன பணி செய்கிறார்? அவருக்கு எவ்வளவு ஊதியம் கிடைக்கிறது? என்பன போன்ற விபரங்களை இனம் கண்டு கொள்ள முடியாது பதவி இறக்கம், ஊதிய முடக்கம் ஏற்படவும் கூடும் வியாபாரமாயின், கஷ்ட நஷ்டம், கடன் தொந்தரவு வாடிக்கையாளர்களின் ஒத்துழையாமை போன்றவை குறுக்கிடக்கூடும் இக்காலத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், எஜமானர்கள் ஆகியவர்களுடன் அனுசரித்துப் போவது நல்லது. இல்லாவிட்டால் சகலத்திலும் பிரச்சினைதான்.

ஜீவன ஸ்தானாதிபதி, சூரியன் அல்லாத வேறு கிரகமாக இருந்து, அக்கிரகம் சூரியனுடன் கூடியிருந்தால், அந்த ஜாதகருக்கு செய்யும் தொழில், வியாபாரம் உத்தியோகத்தில் அடிக்கடி இடமாற்றம், தவிர்க்க முடியாத பிரச்சினை போன்றவை உருவாகும். சூரியனும்- அங்காரகனும் கூடியுள்ள ஜாதகருக்கு உத்தியோகம் நிலைப்பதில்லை. ஓரிரு முறை தற்காலிக உத்தியோகம் இறுதி வரையில்நின்று பலன் தரும். அப்படியின்றி, ஆரம்பத்தில் கிடைக்கக்கூடியஉத்தியோகம் தொடர்ந்து பலன் தரக் கூடியதாக இருந்தால் அது இடையில தடைப்பட்டு கெட்ட பெயருடன் வெளியேறவேண்டி இருக்கும். இப்படிப்பட்ட கிரக அமைப்பைப் பெற்றவர்கள் கூடிய மட்டும் சுய வியாபாரத்தில் ஈடுபட வேண்டும். கூட்டு வியாபாரமும் பலன் தராது, தனியார் துறை அல்லது அரசாங்கத்துறை ஆகியவற்றில் பணி செய்வது சரியல்ல. அப்படியே பணி செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டு விட்டால், தமது சர்வீசை ஒழுங்காக காப்பாற்றிக் கொள்ள வேண்டும். வெகுளித்தனமாக இருக்கக்கூடாது.

குரு, புதன், சுக்கிரன்

மீனலக்கினம், மிதுனலக்கினம் ஆகிய இருஜாதகர்களுக்கு குரு ஜீவனாதிபதியாகிறார். கன்னியாலக்கினம், தனுசு லக்கினம் ஆகிய இரு ஜாதகர்களுக்குப் புதன் ஜீவனாதிபதியாகிறார். சிம்மலக்கினம், மகரலக்கினம் ஆகிய இரு ஜாதகர்களுக்கும் சுக்கிரன் ஜீவனாதிபதியாகிறர்ர். இவர்களுக்கு எல்லாம் முறையே, குரு-புதன்-சுக்கிரன் ஆகிய கிரகங்கள் கேந்திராதிபத்திய தோஷம் தரக் கூடியவர்களாக அமைவதால், இவர்களுக்கு எல்லாம், எளிதில் நிலையான உத்தியோகம் கிடைக்காது. பல முறை, பல திறப்பட்ட வேலைகளைச் செய்து மாய்ந்து போகும் சமயத்தில், நிலையான வேலை வாய்ப்புக்கு வழிஉண்டாகும். குரு ஜீவனாதிபதியானால், அவர்களுக்கு நிதி அல்லது நீதித் துறையில் உத்தியோகமும்-புதன் ஜீவனாதிபதியானால், அவர்களுக்கு கல்வி-ஜோதிடம் சரித்திர ஆராய்ச்சி -புராண பிரசங்கம்-ஆடிட்டிங் போன்றதுறைகளில்உத்தியோகம் வருவாய் அமையும். சுக்கிரன் ஜீவனாதிபதியானால் கலைத்துறை - உணவுப் பண்டம் இரசாயனம்-மருத்துவம் டெக்ஸ்டைல்ஸ் - மினரல்ஸ்-விவசாயம் - கச்சாப்பொருள்-வண்டி வாகனம் - கால்நடை கறவை மாடுகள் போன்ற வகைகளில் வருவாய், உத்தியோகம்அமையும், கேந்திராதிபத்திய தோஷம் கொடுத்து, அதன் பிறகு அமையும் உத்தியோகம், வருவாய் போன்றவைகள் இப்படியாகஇருக்கும்.

லக்கினாதிபதி பத்தில் இருந்தாலும், சுக்கிரன் பன்னிரண்டில் இடம் பெற்றாலும், கன்னியா லக்கினம் அல்லது கன்னியா ராசியாகப் பிறந்தாலும், திருவோண நட்சத்திர ஜெனனமானாலும். அந்த ஜாதகர்கள் கஞ்சத்திலும் கஞ்சம் படுகஞ்சமாக இருப்பார்கள். இனிக்க இனிக்க பேசி, காரிய சாதனை பெற்ற பிறகு அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது சுடுசரங்களை அள்ளி வீசுவார்கள். ஒரு சிலர் இனிக்க இனிக்கப் பேசியே கடைசி வரையில் பிரதி உபகாரம் செய்யாமல் தட்டிக் கழித்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்களுடன் முறைப்படி ஒப்பந்தம் செய்து கொண்டு தான் தொடர்பு கொள்ளும் பணியில் இறங்க வேண்டும்.

## தொகுப்பு மதிவாணர்

அரசாங்கத் தொழில்

கடகலக்கினம் - கும்பலக்கினம் ஆகிய இரு லக்கினகாரர்களுக்கு அங்காரகன் ஜீவனஸ்தானாதிபதியாக அமைவதால், இவர்கள் எப்படியும் அரசாங்க உத்தியோகத்தின் மூலமோ அல்லது அரசியலின் மூலமோ, அல்லது அரசாங்க காண்ட்ராக்டின் மூலமோ வருவாய் யோகம்பெறக்டியவர்கள் ஆகின்றனர். பத்தில் செவ்வாய் என்ற அங்காரகன் இடம் பெற்றுள்ள ஜாதகர்கள் எந்நிலையிலும் உன்னதமான ஸ்தானம் பெறக்கூடியவர்களாகின்றனர். இப்படிப்பட்ட அங்காரகன், லக்கினத்திற்கு 3-6-9-10-11 ஆகிய ஸ்தானங்களில் இருந்தாலும், அல்லது ஆட்சி உச்சம் பெற்றாலும் அவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைப்பது சாத்தியமாகிவிடும். இந்த செவ்வாய் குருபார்வை அல்லது குருசேர்க்கை பெறின் கெஜட் பதிவு பெற்ற அதிகாரி என்ற உத்தியோகம் பல படிகளில் உயர்வடையும். மற்றவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டால், அதில்அவர்கள் தோல்வியைத் தான்காண வேண்டி இருக்கும்.

ஆறாம் வீட்டுக் கிரகம்

பெரிய அதிகாரிகள் சிலர் (நரி வலையில் நரி சிக்கிக் கொள்வது போல) எதிரிகளின் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டு, தமது பதவி, கௌரவம், அந்தஸ்து ஆகியவைகளை இழப்பதும் அல்லாமல், காராகிரகவாசத்திற்கும் ஆளாகின்றார்கள். இதற்கு மூலகாரணம், லக்கினத்திற்கு 6 ம் இல்லத்து கிரகஅடைவின் காரணமேயன்றி வேறில்லை. அது எப்படி? என்று பார்த்தால், ஜெனனலக்கினத்திற்கு ஆறாமிடம் பணியாட்கள்-சகஊழியர்களின் நட்புறவு போன்றவைகளைக் குறிக்கும். இந்த ஸ்தானாபதி நிலைமை எப்படி இருந்தாலும், இந்த ஸ்தானத்தில், சூரியனோ அல்லது குருவோ அல்லது சுக்கிரனோ இடம் பெற்று இருக்க வேண்டும். அப்படியின்றி காலியாகவாவது இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஜாதகர்களுக்கு சக ஊழியர்களாலும், அல்லது கீழ் மட்டப் பணியாளர்களாலும் அல்லது மனைவியாலும் எவ்விதபாதிப்பும்ஏற்படாது. மற்றவர்களை நம்பி எதையும் செய்யலாம். அப்படியின்றி, ஆறாமிடத்தில், ராகு அல்லது கேது இருந்தால், நாம் விழிப்பாக இருக்கும் வரையில் எவ்வித அசம்பாவிதமும் நடக்காது. சற்று பாராமல் இருந்தால்விபரீதம் ஏற்படாமல் இருக்காது. ஆறாம் இல்லத்தில் சந்திரனோ, அங்காரகனோ, புதனோ, சனியோஇருந்தால், எதிரிகள் பாடு வேட்டை தான். ஜாதகர் என்னதான் விழிப்பாக இருந்தாலும், பொறுப்புள்ள காரியத்தைக் கோட்டை விட்டு விடுவார்கள்.

கீழ் மட்டப் பணியாட்களும், சகஊழியர்களும் ஜாதகரை எப்படியும் வலை விரித்

(2ஆம் பக்கம் பார்க்க)

## உருவச்சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் முன்னாள் அதிபர் அமரர் மு. கார்த்திகேசுவின் உருவச்சிலை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

பி. ப. 1 மணிக்கு அதிபர் ஆ.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக ஊர் காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## அதிபர்களுக்கு கூட்டம்

(மந்திகை)

பளை, கொடிகாமம் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கானகூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக கோட்டக்கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (எ-23)

## சித்திர பாட கருத்தரங்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்திரம், ஆக்கத் தொழிற்பாடு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும்நாளை முதல் யா. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இக் கருத்தரங்கு ஏப்ரல் மாதத்திற்கு பிற்போடப்பட்டிருப்பதாக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். (உ)

## கட்டடத்திற்கு அத்திவாரம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இடப்பற்றாக்குறையினை ஓரளவு நிவிர்த்தி செய்யும் முகமாக இடைக்கால ஏற்பாடாக உலக வங்கி வழங்கியுள்ள 35 மில்லியன் ரூபா மூலம் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத் தொகுதிக்கான அத்திவாரமிடும் நிகழ்வு கோப்பாய், இராசவீதியிலுள்ள கல்லூரியின் காணியில் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ)

## வடமராட்சி தெற்கு- மேற்கில் 5 வது நடமாடும் செயலக சேவை செவ்வாயன்று

(மந்திகை)

அரசினுடைய நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் 5 வது நடமாடும் சேவை, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கரணவாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென பிரதேச செயலர்செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

கரணவாய், கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு, இமையாணன், கரணவாய் கிழக்கு, கரணவாய் வட மேற்கு, கரணவாய் வடக்கு, கரணவாய் மத்திஆகிய கிராம அலுவலர்பிரிவிலுள்ள மக்கள் தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு அன்றைய தினம் தீர்வு காண முடியும்

கல்வி, மின்சாரசபை, போக்குவரத்து சபை, கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட பதிவாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, சுமநல திணைக்கள அதிகாரிகள், வைத்தியசாலை, பிரதேச சபை என்பனவற்றின் தலைவர்கள், பிரதேச செயலக புனர்வாழ்வுப் பகுதி, சமூக சேவை, அடையாள அட்டை பிரிவு, திட்டமிடல் பிரிவு, சமுர்த்தி, கலரசாரம் என்பனவற்றின் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-23)

## கத்தோலிக்க சமயபாட ஆசிரியர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில்உள்வாங்கப்படாமல், பாடசாலைகளில் கத்தோலிக்க சமய பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தேசிய ரீதியில் பயிற்சிநெறி ஒன்று நடத்தப்படவுள்ளதாக யாழ்.மறை மாவட்ட மறைக் கல்வி இயக்குநர் ஆர். சி. எக்ஸ். நேசராஜா தெரிவித்துள்ளார்.

இந்தப்பயிற்சி நெறியைப் பயில விரும்புவோர் பெயர் தற்போதைய முகவரி, தெரிவு செய்யும் பாடநெறி, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) போன்ற விபரங்களை இயக்குநர், மறைக்கல்வி நடு நிலையம், தபால் பெட்டி இலக்கம் 2, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும்,

பயிற்சி நெறிகள் பற்றிய விபரம் பின்னர் தெரியப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே மார்க்கம்

### அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்தில் அமெரிக்கா தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளது.

இதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் வழங்க அமெரிக்கா தயாராகவுள்ளது.

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றெக்கா நேற்று முன்தினம் பலாலி படைத்தளத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசிய வேளை இதனைத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறாது அரசும் புலிகளும் தொடர்ந்தும் அதற்கு ஆதரவு நல்குவார்கள் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ)

## உடத்தலவின்ன படுகொலை சந்தேக நபரொருவர் சரணடைந்துள்ளார்

உடத்தலவின்ன படுகொலை சம்பவம் தொடர்பான சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் தெல்தெனிய நீதிவான் முன்னிலையில் சரணடைந்துள்ளார்.


இந்நபரை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்நபர் அனுருத்த ரத்வத்தையின் புதல்வருடன் நெருங்கிச் செயற்பட்டுள்ளார் என சி.ஐ.டி. பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (செ)

# நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய
# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

17-03-2002





ஆலயத்தின் முகப்புத் தோற்றம்

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

நல்லையம்பதியில் வீற்றிருந்து நம்மையாளும் மனோன்மணி அம்பாளுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

அன்னை பராசக்தி இப் பூமியில் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருந்து அண்டங்களை ஆளுகின்றாள். அன்னையின் அருளாட்சியால் தமிழ் மக்களாகிய நாம் துன்பதுயரங்களுக்கு மத்தியிலும் வாழ முடிகின்றது. நல்லைவேலனின் பதியின் ஈசான மூலையில் மனோன்மணித்தாயின் உறைவிடம் இருப்பது, நமக்குப் பெருமை தருகின்றது. தேரோடும் வீதியெங்கும் இறைவன் குடியிருக்கும் நல்லூர்ப் பதியில் மனோன்மணி அம்மைக்கு நடைபெறும் மகாகுடமுழுக்கை கண்டு நாமும் பேரின்பம் அடைவோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*நல்லை ஆதீனம்*
*நல்லூர்*

**ஸ்ரீலஸ்ரீ, சோமசுந்தர ஞானதேசிக பரமாசார்ய சுவாமிகள்**

## ஆலயப் பிரதம குருவின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் - நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன புனராவர்த்தன பஞ்ச குண்டபசஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. அன்னைக்கு திருக்குட முழுக்காற்றி அவளின் அருட் பிரவாகத்தை சைவப் பெருவாழ் மக்கள் பெறவேண்டும் என்பது எமது விருப்பாக இருந்தது. அந்த அற்புதமான மகாகுடமுழுக்கு இன்று நிறைவேறுவதற்கு அன்னையின் கடைக்கண் பார்வையே காரணமாகும்.

நல்லூரத் திருவூரில் குடிகொண்டிருக்கும் மனோன்மணி அம்மன் ஆலயத்திற்கு பழமை வாய்ந்த அற்புதமான வரலாறு உண்டு. மகிமையும் தெய்வப் பொலிவும் உடைய அன்னை மனோன்மணியின் அருளாட்சி வையகம் எங்கும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*நல்லூர் மனோன் மணி*
*அம்மன் தேவஸ்தானம்*

**பிரம்மஸ்ரீ.இ.சண்முகநாதசர்மா**
பிரதமகுருவும் தர்மகர்த்தாவும்


## கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

**சுப்பஸோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப்**
198/5 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**குகன் ஸ்ரோர்ஸ்**
180 (380) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-2767

**சிறி நதியா நகைமாளிகை**
01, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிசந்தி,
யாழ்ப்பாணம்.

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-2024, 2025

**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**
161A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-2219

## இன்று ஒரு தகவல்

### ஊழி தீர்க்கும் ஓமம்

ஓமம் சிறிய செடி வகுப்பைச் சேர்ந்தது. நான்கு அடி உயரம் வரை வளரும். அசம்தா ஓமம், அசமதாகம், திப்பியம் என்று வேறு பெயர்கள் உண்டு. இலைகள் கூட்டிலை. சிற்றிலைகள் ஒரு அச்சின் இரண்டு பக்கங்களில் காணப்படும் அல்லது இலை மீண்டும் மீண்டும் பிளந்து கிளைத்திருக்கும். மஞ்சரி அம்பெல் வகையைப் போன்றது. பூக்கள் வெண்மை நிறத்தன், இருபாலின. பூவடி செதில், சிறு பூவடி செதில் காணப்படும். மலட்டுப் பூக்களின் இதழ்கள் ஒழுங்காக இருக்காது. புல்லியிதழ் மிகச் சிறியது. அல்லியிதழ் அகன்று நீண்டு இருக்கும். கனி பெரிகார்ப் வகையைச் சேர்ந்தது. குறுக்கப்பட்டிருக்கும் கனியின் இரண்டு வரம்புகளின் இடையில் உள்ள பள்ளத்தில் ஒரு விட்டே காணப்படும்.

விதைகளும், கனிகளும் பசித்தீ தூண்டும். இசிவகற்றியாகவும், வயிற்று வாயு அகற்றியாகவும் செயல்படும். வெப்பமுண்டாக்கி அழுகலகற்றும், உடலை உரமாக்கும், உமிழ்நீரைப் பெருக்கும். கப சம்பந்தமான நோய்களான இருமல், இரைப்பு, சுரம் மற்றும் செரியாமந்தம், வயிற்றுப் பொருமல், கழிச்சல் போன்ற நோய்களிலும் ஓமம் பயன்படுகிறது. சிறு குழந்தைகளின் மந்தம் போன்ற வயிற்று உபாதைகளில் இது அதிகம் பயன்படுகிறது. 100 கிராம் ஓமத்தில், கார்போஹைட்ரேட் 38.3கி, புரோட்டீன் 15 1கி, கொழுப்புச்சத்து 17.8கி, கல்சியம் 1400 மி.கி, பொஸ்பரஸ் 297 மி.கி, இரும்புச்சத்து 14.4 மி.கி, கலோரிகள் 378 அடங்கியுள்ளன. ஓமத்தில் சைமின், டர்பின், தைமின் போன்ற வாலடைல் ஆயில்கள் இருப்பதால் ஓமத்திற்குத் தனிப்பட்ட மணம் உண்டு.

ஓமம், மிளகு வகைக்கு 35 கிராம் எடுத்து சம அளவு வெல்லம் சேர்த்து காலை-மாலை இருவேளை ஏழுகிராம் வீதம் உட்கொள்ள வயிற்றுக் கடுப்பு, பொருமல், கழிச்சல் ஆகியவை தீரும். குழந்தை பிறந்தவுடன் தாய்மார்களுக்கு ஓமம் 10 கிராம் வெல்லத்துடன் சேர்த்து தனியாகத் தினமும் கொடுப்பதால் வயிற்று உபாதைகள் வராமல் தடுக்கலாம். இதனை அரைத்து புண், சரப்பான் போன்ற இடங்களில் தடவி வர அவை குணமாகும். ஓமக் குடிநீரைத் தொண்டைக் கட்டு, குரல் கம்மல் போன்ற நிலைகளில் உபயோகிக்கலாம். சிறு குழந்தைகளுக்கு உபயோகிப்பதால் வாந்தி, எதிரெடுத்தல் போன்றவை தீரும்.

அடிபட்டவலி, வீக்கம் போன்ற நிலைகளில் ஓமத்தை அரைத்துப் பற்றிடலாம். அல்லது தேங்காய் எண்ணெயில் காய்ச்சியும் உபயோகிக்கலாம். சிறிது ஏலத்துடன் ஓமத்தைச் சேர்த்து உட்கொள்ள வயிற்றுக் கடுப்பு குணமாகும். அதிக அளவு ஓமத்தை உட்கொள்ளுதல் நல்லதல்ல. அதிக அளவில் தினந்தோறும் உட்கொள்ள உடல் வரட்சி, கண் பாதிப்பு ஆகியவை உண்டாகும். இதனால் கபசுரம், இருமல், செரியா மந்தம், பொருமல், கழிச்சல், ஊழி, குடலிரைச்சல், இரைப்பு, பல் நோய், குஷ்டரோகம் ஆகியவை போகும். ஓமத்திலிருந்து ஓமத்தீநீர், ஓமத்தைலம் எடுத்து வழங்கலாம். ஓமத்தீநீர் ஊழி, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, சொரியக் கழிச்சல், மந்தம் ஆகியவைகளைப் போக்கலாம். வயிற்றுவாயு அசலும். ஓமத்தை அரைத்துப் பற்றுப் போட வயிற்றுவலி நீங்கும்.

டாக்டர் இரா. கண்ணன்

# ஆதீனத்தை அவமதித்த செயலுக்கு இந்து அமைப்புகள் போர்க் கொடி

## கண்டனக் கூட்டம் நடத்தவும் முடிவு

(யாழ்ப்பாணம்)

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுயாழ்ப்பாணம் வருகை தந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நல்லை ஆதீனத்திற்குச் செல்லாது இந்துமதத்தை அவமதித்த செயலுக்கு, இந்து அமைப்புக்கள் போர்க் கொடி தூக்கியுள்ளன.

பிரதமர், ஆயரின் இல்லத்திற்குச் சென்று கிறிஸ்தவ மதத்தை கௌரவித்ததை வரவேற்கும் அதே வேளை இந்து மதத்தைப் புறந்தள்ளி, இந்துக்களுக்கு வேதனையை ஏற்படுத்திய செயலுக்கு பிரதமர் ரணில் இந்துக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டுமெனவும் இந்து அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதே வேளை, ஆதீனத்தை அவமதித்தமை குறித்து சகல இந்து அமைப்புகளும் பிரதமருக்கு கடிதம் அனுப்புவதுடன் அனைத்து இந்துமத அமைப்புக்களும் கூடி நிலைமையை ஆராயவுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதே வேளை, பிரதமர் ஆதீனத்திற்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ள தகவலை ஆதீன முதல்வருக்குத் தான் தெரியப்படுத்தியதாக யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் வலம்புரிக்கு தெரியப்படுத்தியுள்ளார். (ந)

## அமெரிக்காவின் கருத்தை ஹக்கீம் வரவேற்பு

(கொழும்பு)

சர்வதேச சமூகம் இலங்கையின் போர் நிறுத்தம் பற்றிய தனது அபிப்பிராயத்தை தெரிவிக்கும் போது அதனைக் கண்டிப்பதற்கு எந்தக்கட்சிக்கும் உரிமைகிடையாது என்று அமைச்சர் ராவுப் ஹக்கீம் மடவளை மதீனா தேசியப்பாடசாலையின் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஒரு வல்லரசு போர் நிறுத்த நிலைவரங்களை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தியே யுத்தத்தினால் சின்னா பின்னப்பட்டுப் போய் கிடக்கும் நாட்டின் மக்களுக்கு ஒரு ஆறுதலளிக்கும் விடயமாகும்.

நோர்வே நாட்டினர் சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணையாளர்களாவிருப்பதால் வேறு எந்தவொரு நாடும் ஆக்கபூர்வமான விமர்சனங்களைத் தெரிவிக்கக்கூடாது என்பது அர்த்தமாகாது என்று குறிப்பிட்டார். (உ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் வருடாந்த பங்குனி மகோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எட்டுத்தினங்கள் திருவிழா நடைபெற்று ஒன்பதாம் நாளான 27 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பஞ்சரத பவனியும், 28 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (செ)

## கிளிநொச்சிக்கும் கொழும்புக்கும் இடையே தொலை தொடர்பு வசதி

(கொழும்பு)

யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்துக்கும் வன்னியில் கிளிநொச்சியிலுள்ள கண்காணிப்புகுழுவின் தலைமையகத்திற்குமிடையே தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசும்விடுதலைப் புலிகளும்செய்துகொண்டுள்ள நிரந்தர யுத்தநிறுத்தத்தை கண்காணிக்கும் குழுவின்பணிகளை இலகுபடுத்தவும் உடனுக்குடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும்தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## 1 கி.மீ.தூரம் மீன்பிடிக்க படையினர் தடைவிதிப்பு

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு மீன்பிடிப்பதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதனால் பாதிப்படைந்துள்ள அப்பகுதிக்கடற்றொழிலாளர்கள் தமக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்படைமுகாமைச் சூழவுள்ள பகுதிகளில் ஒரு கிலோ மீற்றர் தூரம் பாதுகாப்பு வலயமாகப் பேணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதனாலேயே இத்தடையை விதித்துள்ளதாக படையினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## போட்டியில் பரிசு பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தையொட்டி கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை, அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை, பூம்புகார் அ.த.க. பாடசாலைஆகியனஇணைந்து நடத்தியசமயஅறிவுப்போட்டியில்கந்தர்மடம்சைவப்பிரகாச வித்தியாசாலையைச் சேர்ந்த செல்வி த.கல்பனா (தரம்-II) முதலாம் இடத்தையும் செல்வன் ஜெ.டர்மிலன்(தரம்-3) இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த செல்வி இ.சகிகலா(தரம்-8), பூம்புகார்அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த செல்வி மு.விக்னேஸ்வரி(தரம்-9) ஆகியோர் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

பத்து மாணவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. (எ)

## குப்பி விளக்குகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது

நாட்டின் தென்பகுதிகளில் மின் வெட்டுக் காரணமாக குப்பிவிளக்குகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

முன்பு 2 ரூபாவிற்கு விற்கப்பட்ட குப்பி விளக்கு ஒன்று தற்பொழுது 10 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் பழுதடைந்த பல்புகளிலும் குப்பிவிளக்கு செய்யப்படுவதனால் அவைகளுக்கும் நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது. (செ)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தவர்க்கு

## ஆசிரிய நியமனங்களில் முன்னுரிமை வழங்குக

### 3 ஆம் நிலை கல்வியமைச்சருக்கு மகஜர்

(மந்திகை)

ஆசிரியர் நியமனங்களை வழங்கும்போது பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த,கல்வி கற்றுவிட்டு தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் நலன்காக்கும் கழகம், மூன்றாம் நிலைக் கல்வியமைச்சரிடம் கையளித்த மகஜரில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வாழ்ந்து வந்த சுமார் இரண்டாயிரம் குடும்பங்களில் 250 பேர் மாத்திரமே அரச பதவி வகித்து வருகின்றனர்.

ஏனையோர் நாளாந்தம் கூலிவேலை மற்றும் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட இடப்பெயர்வினால் இங்கு வாழ்ந்த மக்கள் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் நிவாரணத்தை நம்பிவாழ்ந்து வருகின்றனர்.

இப் பிரதேசத்திலுள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு தங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள தொண்டர் ஆசிரியர், உயர்தரப்புள்ளி அடிப்படை ஆசிரியர்,பட்டதாரி ஆசிரியர் நியமனங்களின்போது இப்பிரதேச படித்த இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமையளிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

# பிரதமர் ரணிலின் யாழ். விஜயம் சமாதானத்திற்கான சமிக்ஞை

## கதிர்காமர் கருத்து

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாணவிஜயமானது இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முக்கியமான நடவடிக்கையாகுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

பிரதமரின் யாழ். விஜயமானது அப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய நல்லெண்ண விஜயமாக அமைந்துள்ளது.

இதேவேளை, இனப்பிரச்சினை விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலமான தீர்வை எட்டும் பொருட்டு யுத்த நிறுத்த கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள குழுவினர் தமது கடமைகளை நியாயமாகச் செய்வார்களென ஜனாதிபதி நம்பிக்கை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## சிந்தனைக்கு விருந்து

### பழைய நிலைக்குத் திரும்பும் நாள் தவநாள்

வாழ்வுக்காம் வளங்கள்பல மலிந்து மக்கள்
வரத்துக்கும் போக்குக்கும் வழியாய் அன்று
காழ்ப்பற்றுக் கொலையற்றுக் களிப்பே மிக்குக்
காட்சிதந்த யாழ்ப்பாணக் கொழும்பு வீதி
பாழ்பட்டுப் படையார வாரம் மிக்குப்
பயத்துக்காம் கண்ணிவெடி மிகவும் பெற்றுத்
தாழ்வுற்ற நிலைமாறி மீண்டும் முன்னாள்
தகைமைக்குத் திரும்பும்நாள் தவநாளேயாம்!

-பழையவன்

# தென்மராட்சிப் பகுதியில் ஒரு வருட காலத்தில்
# 11, 030 மரபுவழியான மிதிவெடிகள் மீட்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் 2001 மார்ச் மாதம் முதல் 2002 மார்ச் மாதம் வரையிலானஒரு வருடகாலத்தில் இராணுவத்தின் மிதிவெடி அகற்றும் குழுவினர் மொத்தமாக 11 ஆயிரத்து 30 மரபு வழியானமிதிவெடிகளை மீட்டுள்ளதாகத்தெரிவித்துள்ளனர்.

பி-4 எம் .கே.ஏ.பி மிதிவெடி 9 ஆயிரத்து 33, எம்-72 ஏ.பி மிதிவெடி ஆயிரத்து 889, வி.எஸ்-50 ஏ.பி மிதிவெடி 82, கிளைமோர் மிதிவெடி 22, எம்-15 ஏ.ரீ.கே. மிதிவெடி 4 ஆகியன இவற்றில் அடங்கும்.

அத்துடன், 2001 மார்ச் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் 7படையினர் காயமடைந்துள்ளனர்.

அதேபோல இவ்வருடம் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் இப்பணியில் ஈடுபட்டிருந்த ஒரு படை வீரரும் காயமடைந்துள்ளார்.

இது இவ்விதமிருக்க தென்மராட்சி பிரதேசத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கெடுக்கப்பட்டதும், தேடிக்கண்டு பிடிக்கப்பட்டதுமான சுமார் 15 வகையான, மொத்தம் 2 ஆயிரத்து 150 வரையிலான குண்டுகள், கைக்குண்டுகள், ஷெல்கள் போன்றவையும் பாதுகாப்புப் படையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்தில் இது வரை மூன்றில் ஒரு பகுதியில்மிதிவெடிகள் செயலிழக்க வைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

தென்மராட்சி பிரதேசத்திற்கு மக்கள் மீளவும் குடியமர அனுமதிக்கப்பட்டதன் பின் இது வரை சுமார் 80க்கு மேற்பட்ட பொது மக்கள்மிதிவெடியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிபிரதேசத்தில் புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் மிதிவெடிகளை அகற்றும் பணியில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்னமும் முழுமையாக ஈடுபட முன்வரவில்லை எனவும்அதற்குரிய அனுமதியை அரசும் புலிகளும் வழங்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, யுனிசெவ்நிறுவனம் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை வலிகாமம் வடமராட்சி பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திவருவதாகவும் தெரிய வந்துள்ளது.

மேலும், நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் தென்கிழக்காசியப் பிராந்தியத்துக்கான பிரதி அமைச்சரான திருமதி கிறிஸ்ரினா றொக்கா யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் மிதிவெடிகள் அகற்றும் திட்டம் பற்றியும் கலந்துரையாடியுள்ளார். (உ-77)

## விபத்தில் முதியவர் படுகாயம்

(மந்திகை)

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறச்சென்றவர், மண் ஏற்றிவந்த லொறி மோதியதில் படுகாயமடைந்தார்.

கடந்த வெள்ளியன்று காலை கரவெட்டி தபால் நிலையம் முன்பாக ஏற்பட்ட இந்த விபத்தில் நெல்லியடி தெற்கைச் சேர்ந்த ஆழ்வான் கட்டையன் (வயது - 69) என்ற முதியவரே காயமடைந்தவராவார்.

சம்பந்தப்பட்ட லொறியின் சாரதியை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ-23)

## நெஞ்சுறுத்தும் கானல்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நிகழ்த்தும் மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகையான நெஞ்சுறுத்தும் கானல். நாளை மு.ப11.30 மணிக்கு யாழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (உ)

## உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவன பரீட்சைகள் 26இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் இலங்கை உயர்தொழில் நுட்பகல்வி நிறுவன தேசிய வணிகக்கல்வி டிப்ளோமா (2ஆம்வருடம்), வணிகம், நிதி சார் தேசிய டிப்ளோமா 2ஆம் வரு'டம்), உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (4ஆம் வருடம்), உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா(4ஆம் வருடம்)ஆகிய பாட நெறிகளுக்கான குறிப்பிட்ட வருடங்களுக்குரிய இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி பரீட்சைகள் தொடர்பான நேரசூசிகளை யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தில் வந்து பார்வையிடுமாறு நிறுவன இயக்குநர் ரி.இராசரத்தினம் அறிவித்துள்ளார். (உ)

## ஆரியரட்னாவின் வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

சர்வோதய அமைப்பின் தலைவர் ஏ. ரீ. ஆரியரத்னவின் வீடு இனந்தெரியாதோரினால் குண்டு வீசி தாக்கப்பட்டுளளது.

மொறட்டுவவில் அமைந்துள்ள அவரின் வீட்டுக்கு கடந்த புதன்கிழமை நள்ளிரவு இனந்தெரியாதோரினால் கைக்குண்டொன்று வீசப்பட்டதுடன், எச்சரிக்கைக் கடிதமொன்றும் வீட்டின் தபால் பெட்டிக்குள் போடப்பட்டுள்ளது.

'துரோகியே உனக்கு இறுதி எச்சரிக்கை' என்று ஆரம்பிக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் 'சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டால் கொலை செய்யப்படுவாய்' என்று மிரட்டப்பட்டுள்ளதுடன் கடிதத்துக்கு கீழே 'ராவணா' என்று கையொப்பமிடப்பட்டுள்ளது.

வீட்டின் மீது வீசப்பட்ட கைக்குண்டு வெடிப்பினால் பெரும் சேதம் ஏற்படவில்லையென்று மொறட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 'சர்வோதய அமைப்பும்' 'ஸ்ரீ லங்கா பெஸ்ற்' எனும் அமைப்பும் சமாதானத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழ். குடா நலன்புரி நடவடிக்கைக்காக ஐரோப்பிய ஆணைக்குழு 1 மில்லியன் யூரோ உதவி

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய ஆணைக்குழு ஒரு மில்லியன் யூரோநாணயங்களை உதவித் தொகையாக வழங்கவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை அமைப்பு மற்றும் ஏ.சீ. எஸ். ஆகிய அமைப்புக்களின் ஊடாக இப்பணம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையில் நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கும் மற்றும் நிவாரணப் பொருட்களைவிநியோகம் செய்வதற்குமாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிற்கும் ஏழுலட்சம் யூரோ நாணயங்களை வழங்கவுள்ளது. (செ)

## சமாதானச் சூழலைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்
### அமெரிக்க அமைச்சர் கருத்து

(கொழும்பு)

இலங்கைஅரசும்-விடுதலைப் புலிகளும் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் ஆமிடேச் தெரிவித்துள்ளார்.

கடந்தவியாழன்றுநோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜோன் ஹல்கிஸன் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டு இலங்கை இனப் பிரச்சினைவிவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியதாகவும்,

இதன்போதே அமெரிக்கப் பிரதி வெளியுறவு அமைச்சர் ஹல்கிஸனிடம் மேற்கண்டவாறு தெரிவித்ததாகவும் ரொய்டர் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. (உ-5

## இன்று கவிதைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரையின் கவிதை நூல்வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனகலா மண்டபத்தில் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)

## ஆலயம் புனரமைப்பு

(அராலி)

வட்டுக்கோட்டை சிவன் கோவிலுக்கு அண்மையில் உள்ள சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் முருகன் ஆலய புனரமைப்புவேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (செ-214)

## அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில், கப்பல் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக விவசாய, சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார். (உ-5)

## பரு. வைத்தியசாலையில் மருந்துகள் பலவும் கையிருப்பில் இல்லை

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு, இரத்த அழுத்தநோய்களுக்கான மாத்திரைகள் முடிவடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏனைய பல மருந்து வகைகளும் ஒரு வாரத்திற்கு வேண்டிய அளவே கையிருப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## குடிசைகள் அமைக்க 10 ஆயிரம் நிதியுதவி

(கொழும்பு)

வட மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் தற்காலிகமாக தங்கியுள்ள 100 குடும்பங்களுக்கு குடிசைகளை அமைக்கவென வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு 10 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுளளது.

இதன் பிரகாரம் குடும்பம் ஒன்றுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. (உ)

## அமெ. ராஜாங்க அமைச்சரை சந்திக்க மறுத்த ஜனாதிபதி

(கொழும்பு)

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா மறுத்துவிட்டதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆளும் கட்சியினதும் பிரதான எதிர்க் கட்சியினதும் முக்கிய தலைவர்களைச் சந்திப்பதால் சமாதான விடயத்தில் இரு கட்சிகளினதும் ஒருமித்த கருத்து ஏற்படும் வாய்ப்பை ஏற்படுத்தலாம் என்ற நோக்கத்தில் அமெரிக்கத் தூதுவர் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ததாகவும்,

அதற்கு ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்ததால் பெரும் ஏமாற்றத்திற்காளாகியிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இம்மாத ஆரம்பத்தில் கொமன்வெல்த் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதையும் ஜனாதிபதி இறுதி நேரத்தில் ரத்துச்செய்தமைதெரிந்ததே.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச்டபிள்யு புஷ்ஷுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டன் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)


## கொள்ளையடித்த பண நோட்டுக்கள் செல்லுபடியற்றவையாம்

(கொழும்பு)

அநுராதபுரம் மக்கள் வங்கிக் கிளையில் கடந்த பெப்ரவரி மாதம் கொள்ளையடித்துச்செல்லப்பட்ட 170 இலட்சம் ரூபா பண நோட்டுக்களும் செல்லுபடியாகாதவையென அறிவிக்கப்பட்டுள்ளது.

அப் பண நோட்டுக்களின் இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான தகவல் தருபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனவும் மக்கள் வங்கி அறிவித்துள்ளது. (உ)

# பிரதமரின் யாழ்ப்பாண வருகை



சேதமடைந்த தென்மராட்சியைப் பார்வையிட்ட போது...




சாவகச்சேரி நகர மையத்தில்...



நாகர் கோவிலில்...



நயினை வீகாரையில்...



பலாலியில்...



நயினை நாக பூசனி ஆலயத்தில்...





யாழ் செயலகத்தில்

குணப்படுத்தக் கூடிய நோய்களால்

# 1 கோடி 10 லட்சம் பேர் வருடாந்தம் உயிரிழப்பு

## உலக நல்வாழ்வு நிறுவனம் தகவல்

(இலண்டன்)

குணப்படுத்தக்கூடிய நோய்களால் உலகில் வருடாந்தம் ஒருகோடி பத்துலட்சம் பேர் உயிரிழக்கின்றனர் எனஉலக நல்வாழ்வு நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதில் எண்பது இலட்சம் பேர் சிறுவர்களாவர்.

உலகளவில்மனம் அல்லது நடத்தை சார்ந்த விடயங்களால் ஐந்திற்கு ஒன்று என்ற ரீதியில் சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அந்நிறுவனத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான தீவிர பரிசீலனையில் ஈடுபட்டுவரும் உலகநல்வாழ்வு நிறுவனம் யுனெஸ்கோ நிறுனம் ஆகியன இணைந்து சுவீடனில் சர்வதேச கருத்தரங்கொன்றை நடத்தி வருகின்றன. (செ)

# காஸாவில்நிலை கொண்டிருந்த இஸ்ரேலியப்படைகள் வாபஸ்

(பெத்தலஹேம்)

பலஸ்தீன மேற்குகரை மற்றும் எல்லைப் புறங்களிலிருந்தும் இஸ்ரேல் தனது படைகளை விலக்க ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வரை யாஸீர் அரபாத் வசிப்பிடம் மற்றும் எல்லைப் புறங்களை முற்றுகையிட்டிருந்த இஸ்ரேல் தனது படைகளை விலக்கி வருகிறது

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையில் சமாதானம் ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கப் பிரதிநிதிஅன்ரனி ஜென்னி அங்கு செல்வதை ஒட்டி இஸ்ரேல் இந்தப் படைவிலக்கலை ஆரம்பித்திருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஏற்கனவே அமெரிக்கப் பிரதிநிதிஅன்ரனி ஜென்னி, இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனுடனும்பலஸ்தீன அதிபர் யாஸீர் அரபாத்துடனும் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பில் உரையாடியுள்ளார்.

அமெரிக்கப் பிரதிநிதி இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்குமிடையில் நிரந்தரயுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தவே முயற்சிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# கியூபாவில் விமான விபத்து 17பேர் உயிரிழப்பு

(ஹவானா)

கியூபாவில் பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 17பேர் பலியாகியுள்ளனர்.

கியூபாவின் வடக்குப் பகுதியில் உள்ள கயல்கோ தீவிற்குச் சென்று கொண்டிருந்த வேளை மேற்படி விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான விமானத்தில் 3விமானிகளும் 14 பயணிகளும் சென்றதாகவும், இதுவரை 7 பேரின் சிதைவுற்ற சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# தனி நீதிமன்றங்கள் இரண்டை கலைக்க முடிவு

(சென்னை)

சென்னையிலுள்ள இரண்டு தனி நீதிமன்றங்களைக் கலைப்பதற்கு தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

1996 ஆம் ஆண்டு தி.மு.க பதவியேற்றதும் அ.தி.மு.க. அமைச்சர்கள் மீது தொடரப்பட்ட ஊழல் வழக்குகளைவிசாரிப்பதற்கு மூன்று நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

இந்நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில இன்னும் ஏழு வழக்குகளே நிலுவையில் உள்ளதனால், இவற்றை விசாரிப்பதற்கு ஒரு நீதிமன்றமே போதுமாதலால் ஏனைய இரண்டு நீதிமன்றங்களையும் கலைத்துவிட தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

அத்துடன் அவ்விரண்டு தனி நீதிமன்றங்களையும் செயற்படுத்துவதற்கு ஏற்படும் செலவைக்கொண்டுஉயர் நீதிமன்றம் விரும்புவது போல் பெண்கள் நீதிமன்றம்ஒன்றை நிறுவலாம் எனவும் அரசு கருத்து வெளியிட்டுள்ளது. (செ)

### இராணுவ உலங்கு வானூர்தி வீழ்ந்து நொருங்கியது

(பேர்ளின்)

ஜேர்மனியில் ஹம்பேக் நகரிற்கு அருகில் இராணுவ உலங்கு வானூர்தி ஒன்று வீழ்ந்து நொருங்கியதில்அதில் பயணம் செய்த ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த உலங்கு வானூர்தி இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

யாழில் பிரதமருக்கு கொடுத்த வரவேற்பு

# சமாதானத்தில் மக்களின் ஆர்வத்தைக் காட்டுகிறது

## இந்துஸ்தான் ரைம்ஸ் கருத்து

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பொழுது மக்கள் கட்டிய ஆர்வமும், வரவேற்பும் சமாதானத்தில் மக்கள்வைத்துள்ள விருப்பத்தை வெளிக்காட்டுகின்றது.

இவ்வாறு 'இந்துஸ்தான் ரைம்ஸ்' தனது தலையங்கத்தில் எழுதியுள்ளது.

இலங்கையில் வாழும் சகல இனத்தவர்களும் ஒரே பிரஜைகளாக கணிக்கப்படுவதற்கான முயற்சிகளில் பிரதமர் ஈடுபட்டுள்ளார்.

இம்முயற்சி கொழும்பிலுள்ள ஏனையதலைவர்களின் குரலையும் விட இவரின் குரலை வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றது எனவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. (செ)

### மனோகரா வி.க. வெற்றிபீட்டியது

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலக விளையாட்டுப் பேரவையின் அபிவிருத்தி நிதிக்கான சுப்பர் - 8 உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த செவ்வாயன்று வடமராட்சி றேஞ்சஸ் மைதானத்தில் நடைபெற்ற போது,

மனோகரா விளையாட்டுக் கழகம், வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தினை 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (உ)

# வடக்கில் கண்ணி வெடிகளை அகற்ற அமெ. விருப்பம் தெரிவித்துள்ளது

(கொழும்பு)

வடக்கில் கண்ணி வெடிகளை அகற்றும் திட்டங்களுக்கு உதவி வழங்குவதற்கு அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான அமெரிக்க துணை அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்காவை சந்தித்த போது, இது தொடர்பான வேண்டுகோளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்தார்.

அதற்கமைய ஏ-9 வீதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் புதைக்கப்பட்டுள்ளகண்ணி வெடிகளை அகற்றுவதற்கு அத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை நியமிக்கப் போவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கண்ணிவெடிகளை துரிதமாக அகற்றுவதற்கு குறைந்தது நாற்பது நிபுணர்களாவது தேவைஎன்பதை பிரதமர் சுட்டிக்காட்டியிருந்ததுடன், நவீன உபகரணங்களின் தேவை குறித்தும் சுட்டிக்காட்டியிருந்தார். (செ)

# வட கொரிய அகதிகள் ஸ்பெயின் தூதரகத்தை விட்டு வெளியேறினர்

(பீக்கிங்)

சீனாவிலுள்ள ஸ்பெயின் தூதரகத்தில் தஞ்சம் புகுந்திருந்த இருபத்தைந்து வட கொரிய அகதிகள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

சீன அரசின் சட்ட விதிகளுக்கு ஏற்ப இவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என சீன வெளிவிவகார அதிகாரிகளால் தெரிவிககப்பட்ட போதும்,

தற்போது தமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இழுக்கை நீக்கும் பொருட்டு இவர்களை வெளியேற அனுமதிப்பதாக சீனப் பிரதமர் சூரோன்ஜி தெரிவித்தார்.

இதனையடுத்தே அகதிகள் தூதரகத்தை விட்டு வெளியேறினார்கள். (செ)

### இலங்கை திரைப்படத்திற்கு விருது

(கொழுமபு)

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச வீடியோத் திரைப்பட விழா ஒன்றில் இலங்கைத் தயாரிப்புத் திரைப்படம் ஒன்றிற்கு விருது கிடைத்துள்ளது.

'தலயபல்ஃபற்றியசமர்' என்ற திரைப்படத்திற்கே விருது கிடைத்துள்ளது. (செ)

# தமிழ் மாணவர்களுக்கு அமைச்சர் புகழாரம்

(கொழும்பு)

தமிழ் மாணவர்கள் தமது கல்வியைப் பாதிக்கும் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை.

எவராவது தமது கல்விக்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டால் அதனைப் பொறுத்துக்கொள்ளவும் மாட்டார்கள்.

வர்த்தக நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ரவிகருணாநாயக்கா இவ்வாறு புகழாரம் சூட்டியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் போர்க்காலத்திலும் தமது கல்விச் செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை.

தெற்கிலுள்ள எம்மவர்களைப் போன்று எதற்கெடுத்தாலும் போராட்டம், ஊர்வலம், வீதிப்போராட்டம் என்று நடத்தி தமது கல்வியைச் சீர்குலைக்க மாட்டார்கள்.

அவர்கள் தாம் பெற்ற கல்வியை வைத்துக்கொண்டு சிந்தனையுடன் செயல்களில் இறங்குவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# வறிய நாடுகளுக்கு நிதியுதவிவழங்கும் மாநாடு

(மெச்ஸிக்கோ)

வறிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது உச்சிமாநாடு நாளை திங்கட்கிழமை மெச்ஸிக்கோவில் மொன்ரர்றி நகரில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் உட்பட 50 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

# ஊழல் குற்றச்சாட்டிலிருந்துமுன்னாள் பிரதமர் நரசிம்மராவ் விடுதலை

(புதுடில்லி)

ஜார்க்கனட் முக்திமோர்சா கட்சியின் எம்.பி. களுக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் இருந்து முன்னாள் பிரதமர் நரசிம்மராவையும் அமைச்சர் பூட்டா சிங்கையும் இந்திய உச்ச நீதி மன்றம் நேற்று முன்தினம்விடுதலைசெய்தது.

நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும்படி ஜார்க்கனட்முக்திமோர்சா கட்சியின் 4 எம்பிக்களுக்கு, நரசிம்மராவ் இலஞ்சம் கொடுத்ததாக குற்றஞ் சாட்டப்பட்டதுடன், இவர்களுக்கு 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த தீர்ப்பை ரத்து செய்த உச்ச நீதிமன்றம் இருவரையும் விடுதலை செய்மாறு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்தவழக்கு தொடர்பாக நீதிமன்றத்தினால் ஏற்கனவே 9 பேர் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பான தீர்ப்பை மீளாய்வு செய்யும்படி தாக்கல் செய்யப்பட்ட மனுவும் உச்ச நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்துள்ளது. (உ-5)

# சமாதான முயற்சிக்கு எமது ஆதரவும் உண்டு

## மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லஎதிர்க்கட்சியின் முழு ஆதரவும் உண்டென அதன் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது மக்களுக்குச் செய்யும் உதவியாகும்.

சகல இனத்தவர்களினதும் உரிமைகளை பாதுகாப்பது அரசாங்கத்தைப் போன்று எதிர்க்கட்சியினதும் பொறுப்பாகும் எனத் தெரிவித்த அவர்,

அரசாங்கம் பதவியேற்று நூறு நாட்கள் கடந்துவிட்ட போதும் நாட்டில் எந்த ஒரு அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப் படவில்லையென அவர் குற்றம் சாட்டியுள்ளார். (செ)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல்கடன்.
-குறள்

# வலம்புரி

## கைதிகள் விடுதலை

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் களுத்துறை, பூசா, வெலிக்கடை, நீர்கொழும்பு ஆகிய சிறைகளில் வருடக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா அறிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத போது அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது சட்டத்திற்குப் புறம்பானது அவ்வகையில், தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரின் அறிவிப்பு அமைந்துள்ளது.

எனினும் இவ்வறிவிப்பு சிறைகளில் உள்ள இருநூறு தமிழ்க் கைதிகளை விடுவிப்பதற்கே வழிசெய்துள்ளது. ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவு நீக்கப்பட வேண்டுமென்பது அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் கருத்து. அப்படியாயின் அச்சட்டத்தை நீக்குவதில் என்ன தடையுண்டு. நீண்டதொரு யுத்தத்திற்கு முடிவுகாண பிரதமர் ரணில் தலைமையிலான அரசு துணிந்து விட்ட போது கைதிகளின் விடுதலைக்குத் தடை போடும் சட்டங்களை நீக்குவதற்குத் தடை இருக்கவும் முடியாது இருக்கவும்கூடாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகப் பிரதமர் ரணிலுக்கு மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டுமாயின் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட கையோடு கைதிகளின் விடுதலை-பாதைதிறப்பு புலிகள் மீதான தடையை நீக்குதல் ஆகிய மூன்று விடயங்களையும் அரசு நிறைவேற்ற வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படைபிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் புதிய அரசு தாமதம் காட்டுமாயின் தமிழ் மக்களின் உரிமைகளை எங்ஙனம் வழங்கப்போகிறது என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்படும். கடந்த காலங்களில் சிங்கள அரசுகள் மீது கொண்டசந்தேகமே அதன் மீதான நம்பிக்கை இழப்புக்குக் காரணமாக இருந்ததை அரசு உணரவேண்டும்.

# கடவுளின் தூய ஆவி நமக்குள் குடிகொள்வதற்கு

# தியாகமும் தூய்மையும் பேணப்படுதலவசியம்

### பரமபிதாகாட்டிய பாதை

**அமல அருள்தாசன்**



இவ்வுலக வாழ்வானது உண்டு, குடித்து, உறங்கிச் செல்லும் ஒருவாழ்வல்ல. மாறாக கொண்டு, கொடுத்து, பகிர்ந்துவாழும் வாழ்வாகும். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்றில்லாமல் கற்றோம், அறிந்தோம், கற்றதைக் கொடுத்தோம் என்று நிறைவு காணவேண்டும். அப்போதுதான் நாம் மக்களுக்கு உரியவர்களாகவும் சமூகத்துக்கு உரியவர்களாக, வும் ஆகுகின்றோம். கிறிஸ்து தாம் வாழ்ந்த காலத்தில் மக்கள் மத்தியில் மக்களின் துன்பங்களைக் கண்டு அவற்றைப் போக்குகின்றவராக, இன்பதுன்பங்களில் பங்கு கொண்டு ஆறுதல் கூறுகின்றவர்களாகப் பணியாற்றினார். இலாசர் என்ற தனது நண்பன் இறந்த போது இயேசு கண்ணீர் வடித்தார். (யோவான் 11:35) என்று நற்செய்தி நூல் கூறுகின்றது.

**ஆவியானவர் எம்மில் செயலாற்றுகின்றார்**

பிதா, சுதன், தூய ஆவியால் திருமுழுக்கு பெற்ற எம் ஒவ்வொருவருக்கும் சிறப்பான பணியொன்று உள்ளது. அதாவது எம் சகோதரர்களாக ஏற்றுக்கொண்ட ஏனையவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம் உடலை நாம் பேணிக்காப்பது போல் மற்றவர் துன்பங்களிலும் ஆறுதல் சொல்கின்றவர்களாக, வலுவூட்டுகின்றவர்களாக, மாதிரிகாட்டுகின்றவர்களாக வாழக்கடப்பாடு உடையவர்களாகஇருக்கின்றோம். ‘கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால் நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள்’ (உரோ 8:9) ஊனியல்பே எம்மைப்பாவம் செய்யத் தூண்டுவதாகும். எனவே ஆவியின் அருளைப் பெற்றுள்ள நாம் அந்த அருளின் வாழ்வை வாழவேண்டும்.

**துன்பத்தின் ஊடாகவே மீட்பு**

பாடின்றிப்பட்டமில்லை, துன்பமின்றி இன்பமில்லை, சிலுவைகள் இன்றி மீட்பு இல்லை, சாவின்றி உயிர்ப்புகள் இல்லை. பாவத்துக்கு மடியாமல் பரலோக இராச்சியத்தை நினைக்க முடியாது பிறரன்பை ஒதுக்கி இறையன்பில் இணைய முடியாது. ஒன்றை இழந்துதான் இன்னும் ஒன்றை மேலானதாகப் பெற்றுக் கொள்ளமுடியும் மடியாத விதைகள் மரமாகாது, விடியாத இரவுகள் வெளிச்சம் தராது, புடமிடப்படுதலே பொன் நகையின் சிறப்பு. இவ்வாறு துன்பங்கள் தான் மீட்பின் படிக்கற்களாகக் கொண்டு துன்பச் சிலுவைகளை ஏற்றுச் சுமப்பதே கிறிஸ்தவத்தின் தத்துவமாகும்.

**காலங்கள் தரப்பட்ட சந்தர்ப்பங்கள்**

காலத்தை உணராதவன் களனியில் இறங்கக் கூடாது. அவ்வாறு இறங்குபவன் அழிவையே வருவாயாகப் பெறுவான். தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் மீண்டும் எமக்கு வழங்கப்படுவதில்லை. அந்நாளையும் நேரத்தையும் திரும்பப் பெற முடியாது. கடவுள் தரும் காலங்களை உணர்ந்து கொள்ள கடவுளின் அருளில் நாம் நிலைத்திருக்க வேண்டும். இல்லையேல் சாத்தான் ஆனவன் எம்மை உலகின் கண்ணோட்டத்துக்கு இழுத்துச் சென்றுவிடுவான்.

**விழிப்பாய் இருக்க வேண்டும்**

விவேகமுள்ள கன்னியர் போல விழிப்பாய் இருந்து இறையரசுக்கு எம்மை ஆயத்தம் செய்ய வேண்டும். இல்லையேல் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களும் அள்ளுண்டு சென்றுவிடுவார்கள் நாம் எமது பலத்திலல்ல இறைவனின் பலத்தில் சார்ந்தவர்களாக வாழவேண்டும். பார்த்திருக்க பறித்துச் செல்லும் உலகில் அளவுக்கு அதிகமாகச் சேர்த்து அலகையின் மக்கள் அனுபவிக்க விடக்கூடாது. இறைவன் தந்தான் என்று இணையில்லாத விதத்தில் நன்றி கூறவேண்டும் அப்போது எம்வாழ்வு பயனுள்ள வாழ்வாக அமையும். ●

# புதிய அரசு ஜனநாயகத்தை பேணவில்லை

# ஜனாதிபதியைக் கொல்ல சதி செய்கிறது

### பொ. ஐ. மு. அமைச்சர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கவைக் கொலை செய்யும் சதி முயற்சியொன்றுமேற்கொள்ளப்பட்டு வருகின்றதென பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதியைக் கொலை செய்யும் முன்னோடிமுயற்சியாகவேஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரைப் பலவீனப் படுத்தும் முயற்சிகளும் அவர்களுக்கெதிராகபல்வேறு அவதூறான குற்றச்சாட்டுக்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

புதிய அரசுஜனநாயகத்தை உதாசீனம் செய்துவிட்டு வன்முறையைக் கட்டவிழ்க்கும் நடவடிக்கையையே நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில்ரணில் அரசு அக்கறை கொள்ளாது பொது ஜன ஐக்கிய முன்னணியைப் பலவீனப்படுத்தும் சதிகளைச் செய்வதிலேயே குறியாகவுள்ளது.

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சின் கைது இதன் ஒரு கட்டமே என்று மேலும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(உ)

## அரச ஊழியரின் சம்பளம் முன்கூட்டி வழங்க ஏற்பாடு

அரசாங்க ஊழியர்களுக்கான இந்தமாதச்சம்பளத்தை நாளைதிங்கட்கிழமை வழங்குமாறு பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டே இம்மாதச் சம்பளத்தை முன்கூட்டியே வழங்கும்படி அமைச்சு அறிவித்துள்ளது.

(உ-5)

## தினசரி தியானம்

## வருந்துதல்

எம்மானே! உன் அருள் பெறு நாள்
என்றென்றே வருந்துவனே.

-மாணிக்கவாசகர்

நிலையற்ற உலகப் பொருள்கள் வேண்டுமென்று வருந்துகிற நான், நிலையாய நின்மலனை அடையப் பெறவேண்டுமென்று வருந்து நாள் எந்நாளோ?

நீ உள்ளம் துடித்துக் கண்ணீர் சிந்தும் பொழுது உலகத்தின் துன்பத்தை நினைத்துப்பார். துன்பம் உன்னைத் தாக்கும் பொழுது அது எல்லோரையும் தாக்குகிறது என்று நினை. யாரும் அதினின்று தப்பிக்க முடியாது. இயற்கை படும் துன்பத்தின் ஒரு சிறு பகுதி உன்னை வந்து சார்கிறது. வருத்தப்படுகின்றவனுக்கே பிறர்பால் அனுதாபம் உண்டாகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (33)

**தவக்காலம் - ஐந்தாம் ஞாயிறு (ஊதா)**
**திபா 138:1-8 ‘பேரன்பு ஆண்டவரிடமே உள்ளது. மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு’**

மனிதனின் அழுகுரல் கடவுளை ஒவ்வொரு நாளும் எட்டுகிறது. ஆனால் இன்றைய நற்செய்தியில் தான் அழுகிற கடவுளை மனித உலகம் சந்திக்கிறது. கிரேக்க நாட்டு இறையியலில் இது கடவுளின் பலவீனமாகத் தோன்றலாம். கிரேக்க சிந்தனையில் கடவுள் உணர்வுகளைத் தாண்டியவராகத் தோன்றுகிறார்.

மண்ணுக்கு வந்த கடவுளின் மைந்தர் தன் நண்பர் லாசரின் மரண வேளையில் கண்ணீர் சிந்துகிறார். வாழ்வு மீதும், சாவு மீதும் இயேசு ஆட்சிசெலுத்துகிறார். உயிரும், வாழ்வும், அவர் கரத்தில் உருவானவையே (யோ 14:6) வாழ்வானவர் வாழ்வைத்தர முடியும். கிறிஸ்துவைப் பெறுகிறார். எந்த சாவின் சக்தியும் அதனை முறியடிக்க இயலாது. நம் உயிரையும் வாழ்வையும் வாழ்வின் ஊற்றாம். அவர் வசம்கையளிப் போம். காரணம், அவரது உயிரினில் கலக்கும் வரை நாம் பிறந்ததில் பயனுமில்லை;

போஷாக்கிற்கு
ஜீவாகாரம்

வளரும்
பிள்ளைகளுக்கு
பாலூட்டும்
தாய்மார்களுக்கும்
ஏற்ற சத்துணவு
உணவிற்கு தயார் நிலையில்
உள்ள ஒரு முழு உணவு

# புரிந்துணர்வு ஒப்பந்தம் ஈழஅரசுக்கு வழிவகுக்கும்

## தேசிய சங்க சபா தேரர் தெரிவிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்விடுதலைப்புலிகளின் தலைவர்வே.பிரபாகரனும் கையொப்பமிட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜனநாயகத்துக்கு முரணானது என்று தேசிய சங்கசபா உறவு பேணல் அமைப்பின் செயலாளர் வண.அத்துரலியேரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே உருவாக்கப்பட்டுள்ள நிரந்தரப் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்டித்து கருத்துத் தெரிவித்த தேரர் மேலும் தெரிவிக்கையில்:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனநாயகத்துக்கு எதிரானதாக உள்ளதுடன், சட்டவிரோதமானதும் கூட, இவ் ஒப்பந்தம் விடுதலைப் புலிகள் ஈழஅரசொன்றை அமைக்க அவர்களுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் நோர்வே அரசை மத்தியஸ்தராக ஏற்றுக்கொள்ள முடியாது. விடுதலைப்புலிகள் தொடர்பாக இந்தியா உட்பட பல நாடுகளினதும் அபிப்பிராயங்களை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும், என்று தெரிவித்த ரத்தினதேரர்,

வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்கள மக்கள் மீண்டும் குடியேறி வாழ்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார். (இ)

மில்க்வைற்
உற்பத்திகளை அன்னா
கோப்பிக்கடை, நவீனசந்தை
யாழ்ப்பாணத்தில்
பெற்றுக்கொள்ளலாம்
மில்க்வைற் சோப்
இண்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

யாழ்.தே.க.கல்லூரியின்

## புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரியின்இடப்பற்றாக்குறையினை ஓரளவு நிவர்த்தி செய்யும் வகையில் இடைக்கால ஏற்பாடாக உலக வங்கியினால் அனுமதிக்கப்பட்ட புதிய கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு கோப்பாய் இராசவீதியிலுள்ள கல்லூரியின் காணியில் இடம்பெறும் என யாழ் தேசிய கல்வியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார். (ந)

## பிதிர்க் கடன்களை கீரிமலையில் செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

எவ்வித இடையூறுமின்றி, கீரிமலையில் பொதுமக்கள் பிதிர்க்கடன்களைச் செய்ய முடியும் என வலிவடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் அறிவித்துள்ளார்.

பிதிர்க்கடன் செய்ய வருபவர்கள் மு.ப 10.00 மணிக்கு தெல்லிப்பழை காவலரண் பகுதிக்கு வருவதன் மூலம் வீணான சிரமங்களைத் தவிர்க்கலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (உ)

### புலிகள் மீதான...

விடுதலைப் புலிகளின் இத்தகைய நிலைப்பாடு மிகவும் மகிழ்வானதும் வரவேற்கக் கூடியதுவும் ஆகும். இலங்கையில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை அமெரிக்கா உற்றுக் கவனித்து, என்ன நடக்கப் போகின்றது என்பதை அறிவதில் மிக ஆர்வமாக உள்ளது.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் தற்போதைய நிலை சமாதானத்திற்கான நல்லதொரு சமிக்ஞையாக உள்ளது. இலங்கையில் உருவாகியுள்ள இந்த சமாதான சூழல் தெற்காசியாவில் இருந்து மிக நல்லதொரு சமாதானச் செய்தி வருவதற்கான வாய்ப்பை எடுத்துக் காட்டுகிறது.

இந் நிலையில் புலிகள் தமது அனைத்துப் பயங்கரவாத நடவடிக்கைகளையும் கைவிட்டு, மனித உரிமைகளை மதித்து, தனி நாட்டுக் கோரிக்கையையும் கைவிட்டால் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அமெரிக்காவில் விதிக்கப்பட்ட தடை நீக்கப்படும் என்றும் அமைச்சர் றொக்கா அம்மையார் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அமெரிக்கா விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில், கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். புலிகளில் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டால் அது அமெரிக்காவிற்கு மிகப் பெரிய சந்தோசத்தைத் தரும் என்றும் அவர் கூறினார். (இ)

### நுவரெலியாவில்...

அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சர்வமத தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வெழுச்சி விழாவை 'ஒட்டி மலையகம் எங்கும் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரது படங்களைத் தாங்கிய சுவரொட்டிகள், கட்டவுட்டுகள் காணப்படுகின்றன.

இதேவேளை ஐ.தே. முன்னணி அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், எஸ்.பி. திஸநாயக்க ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### தேர்தல்...

ஆரம்பித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடும் சகல சுயேட்சைக் குழுக்களும் வாக்காளர்களிடம் ஆதரவு கோரி தமது சின்னத்தை தாங்கியுள்ள சுவரொட்டிகளை ஆங்காங்கே ஒட்டி வருகின்றனர். இது இவ்வாறு இருக்க பிற்போடப்பட்டுள்ள இருபது உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இடம் பெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 3மாநகர சபைகள், 5நகர சபைகள், 12பிரதேச சபைகள் ஆகியவற்றிற்கான தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டமை தெரிந்ததே. (வ)

### சர்வதேச...

'சர்வதேச கண்காணிப்புக் குழுவின் தலைவரான நோர்வேயின் முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் றொண்ட் பியூறு ஹெவ்டே தலைமையில் ஐந்து கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

யாழ் வந்த கண்காணிப்புக் குழுவினர்க்கு கண்காணிப்புக் குழுவின் யாழ்ப்பாணப் பிரதிநிதி அ. பஞ்சலிங்கத்தை அரச அதிபர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதேவேளை நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஸ்கன்டிநேவியன் நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுவினர் நேற்றைய தினமே கொழும்பு திரும்பியுள்ளனர். அடுத்த வாரமளவில் தமது கண்காணிப்புப் பணியை அவர்கள் ஆரம்பிக்கவுள்ளனர். (வ)

## பெயர் வளைவு திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் பாடசாலைப் பெயர் வளைவும் புதிய வாயில் திறப்பு விழாவும் நாளை முற்பகல் 11 மணிக்கு அதிபர் ந.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முதன்மை விருந்தினராக க் கலந்து கொள்வார் (இ)

### யாழ் - கண்டி...

பகுதியில் சோதனைச் சாவடிகள், காவலரண்கள் மற்றும் கட்டிடங்களை உடன் அமைப்பதற்கு அரசு வழங்கும் 25 மில்லியன் ரூபாவினை பயன்படுத்த பிரதமர் ரணில் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுமதி வழங்கியுள்ளார். சோதனைச் சாவடிகள், காவலரண்கள் அமைக்கும் பணியில் படையினர் ஏற்கனவே ஈடுபட்டுள்ளதாகவும் இதற்கென சுமார் 15 ஏக்கர் காணி திருத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இம்மாதம் 25ந் திகதிக்குள் ஏ-9 யாழ்- கண்டி வீதி திறக்கப்படவேண்டிய கட்டாயத்தில் அரசு சிக்கியுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமரை நேரில் சந்தித்து உரையாடிய பொது மக்கள் யுத்த நிறுத்தம், சமாதானம் ஆகியவற்றை அரசு கடைப்பிடித்து ஏ-9 கண்டி வீதியை திறந்து விடவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

அத்துடன் கடந்த வியாழக் கிழமை இராணுவத்தினரின் முன்னணிக் காவலரண் பகுதியான முகமாலைக்கு படை உயரதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள், பத்திரிகையாளர்கள் சகிதம் ஹெலி மூலம் சென்று பார்வையிட்ட பிரதமர் அங்குள்ள களநிலையை நேரில் பார்த்து அறிந்து கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (வ)

## சிறுவர் பற்றி சிந்திப்போம்!

அன்பு

ஆதரவு

கருணை

நேசம்

பாசம்



இவையே... சிறுவர்களாகிய எங்களை உன்னதம்மிக்கவர்களாக உருவாக்குகின்றது. ஒவ்வொரு பிள்ளையும் தம் பெற்றோரிடமும் பெரியோரிடமும் எதிர் பார்க்கும் இது போன்ற இயல்புகளை வழங்குவதில் இன்னும் ஏன் தயக்கம்?

விஜயசங்கர்

(TPO)

உங்கள் தொடர்புகளுக்கான
எங்கள் முகவரி,

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறைஎண் 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
தொ. பே:-021-2261 EXT - 274

சிறுவர் பாதுகாப்பு(ஐ. இ)அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் வெளியீடு

(C/3721)

## வாழ்த்துகின்றோம்

நேற்று 16.3.2002 அன்று நடந்த யாழ்.பல் கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட எமது கல்வி நிறுவன ஆசிரியர்களான

இந்து நாகரிகம் :- T.ஸ்ரீஸ்கந்தராஜா B.A(Hons)(Hin -Spc)
அளவையியல் :- T.மோகன்ராஜ் B.A(Hons)(phy -Spc)
புவியியல்:- K.கிரிதரன் B.A(Hons)(Geo -Spc)

ஆகியோரை மனதார வாழ்த்துகின்றோம்.

குருபரன் கல்வி நிறுவனம்
புத்தூர்

இயக்குநர்
அன்ரன்
மற்றும் ஆசிரியர்கள்,
மாணவர்கள். (4846)

## மரண அறிவித்தல்

### திருமதி. இராஜேந்திரக் குருக்கள் சாம்பு நாதேஸ்வரி

நீர்வேலி தெற்கு கந்தசுவாமி கோவிலடி இராஜேந்திரக் குருக்கள் சாம்பு நாதேஸ்வரி நேற்று (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் அமரர் இராஜேந்திரக் குருக்கள் (பிரதமகுரு நீர்வேலி கந்தசுவாமி கோவில்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் செந்தில்நாதசர்மா, வாசுதேவக் குருக்கள் அவர்களின் சகோதரியும் இந்திராச்சி, பாலாம்பிகை, அமரர் சிவானந்தவல்லி, சௌதாமினி, சுவாமிநாதக் குருக்கள், உமா, சண்முகப்பிரியா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பஞ்சாபகேசசர்மா, நடராஜ ஐயர், விஸ்வநாதசர்மா, மகேஸ்வரானந்தன், ரவீணா, ஸ்ரீ ஸ்ரீநிவாசன் ஆகியோரின் மாமியாரும் - மீரா, பாலமுருகன் ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (17.03.2002) காலை 10.00 மணியளவில் இடம்பெறும்.
இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

கந்தசுவாமி கோவில்
நீர்வேலி

(4845)